**ஹொரண நகர சபை -2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள ஹொரண நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் 3.27 ஆம் பிரிவு முதல் 3.32 ஆம் பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைமைக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| • ஆண்டில் இருப்புக்களின் குறைவு ரூபா 143,893 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது காசு வெளிப்பாய்ச்சலாக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| • ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா 48,734,192 ஆக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 54,313,880 ஆக அதாவது ரூபா 5,579,688 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஆண்டில் காசாக மேற்கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள் ரூபா 2,851,332 ஆக இருந்த போதும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 25,683,177 ஆக அதாவது ரூபா 22,831,845 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) நியமத்தின் 6.10 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றின் கிரயத்தில் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் இழிவுப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் பெறப்படுகின்ற பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது சொத்துக்களின் இழிவுப் பெறுமதியை மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் கணிசமான அளவில் காணப்படுகின்றமையால் இழிவுப் பெறுமதி பூச்சியமான கருதி பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 5,294 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன மானியங்களின் பெறுமதி மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்கண்டு மூலதன மானியம் (காலக்கழிவு பெறுமதி) குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதும் ரூபா 1,243,322 ஆன காலக்கழிவு பெறுமதி மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியப் பெறுமதி சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் விரிவான வருமானம் ரூபா 2,486,644 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியம் ரூபா 25,641,082 ஆக இருக்க வேண்டிய போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் இனங்காணப்படாத மூலதன மானியமாக மீளாய்வாண்டின் மிகையில் இனங்காணப்பட்ட மூலதன மானியம் ரூபா 1,243,322 காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் உரிமை மூலதனம் ரூபா 24,397,760 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 153,367,835 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் திரண்ட நிதியமாக ஆண்டிற்கான மிகையாக ரூபா 30,700,416 காண்பிக்கப்பட்டமையால் உரிமை மூலதனம் ரூபா | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 122,667,419 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியம், மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் நன்கொடை போன்றவற்றின் பெறுமதி காண்பிக்கப்படாமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த உரிமை மூலதனத்தின் பெறுமதி சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 7,637,500 மற்றும் நூலக பெறுமானத்தேய்வு ரூபா 1,430,419 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டில் தனியார் நிறுவனத்திலிருந்து கிடைக்கப் பெற்ற 06 கணனிகள் மற்றும் நிழற்பட பிரதி இயந்திரம் என்பவற்றின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டில் களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 66,000 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மூலதனமாக்குவதற்கு பதிலாக அலுவலக வளங்கள் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | சபைக்குச் சொந்தமான 15 காணிகளின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டில் வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 245,381 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் போது சபையின் வேலைகள் மற்றும் வெளிவாரி கடன்கொடுத்தோர் ரூபா 1,066,327 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டில் வீதிகள் மற்றும் மதகுகளாக சொத்துக் கணக்கில் ரூபா 17,915,801 மற்றும் நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 3,629,940 வரவு வைக்க வேண்டிய போதிலும் சொத்துக்கள் கணக்கில் ரூபா 23,400,750 சேர்த்தலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | 2019 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தரால் சபைக்கு தீர்த்து வைக்கப்பட்ட இடர்கடன் மீதி ரூபா 175,500 மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற படிகள் ரூபா 169,094 என்பன குறித்த கணக்கு மீதியில் சீராக்கப்படாமல் ஏனைய வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கா) | மீளாய்வாண்டில் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 234,091 ஆன 11 கடன்கொடுத்தோர் மீதிகள் மேலும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கி) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய பணிப்பாளருக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட மீதி ரூபா 30,021 இற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 39,151 செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கீ) | அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக 2015 | - மேற்படி - | - மேற்படி - |

மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 448,636 தொகையை தீர்த்து வைப்பதற்கோ அல்லது சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் இடையே ரூபா 3,033,957 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் பட்டோலைகள் சரியாக சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் பட்டோலைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,700,416 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,320,659 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 52,728,825 ஆக இருந்ததுடன் அந்த ஆண்டிற்காக உறுதிப்படுத்தப்பட்ட முத்திரைக் கட்டண பட்டோலை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் தொடர்பான பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. | பட்டோலைகள் தயாரித்து நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் iv ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரந்தர பதவியணியினருக்குரிய 44 சுகாதார தொழிலாளர்களில் 20 பேர்கள் அந்த பதவிக்கு புறம்பாக ஏனைய பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | நகர சபைக்குரிய ஏனைய இடங்களில் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவிக்கு புறம்பான ஏனைய பதவிகளுக்காக நியமிக்காதிருத்தல் வேண்டும். |